1975 மார்ச் 12]

திரு. பி. பொன் சொக்கலிங்கம்: தமிழ்நாட்டில் சிறப்பு மிக்க தேவாலயங்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நாம் பல சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் வற்புறுத்தி வருகிறோம். ஆயினும் கடந்த எட்டாண்டுகளில் அவர்கள் 51 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் தேசிய நெடுஞ்சாலையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நிறைய இடங்களைச் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். இதுவரை பதில் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைக்கின்ற முகத்தான் சில இடங்களில் பைபாஸ் ரோடு போடும் திட்டம் இருந்ததே, அந்த பைபாஸ் ரோடுகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்தால் உடனடியாக அதைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பை பாஸ் ரோடுகள் போடப்படாமல் தேசிய நெடுஞ்சாலையை இடிக்கவோ, பாலத்தை இடிக்கவோ ஆரம்பிப்பதில்லை. பைபாஸ் ரோடுகளை முதலில் போட்டுவிட்டுத்தான் இந்த வேலைகள் நடைபெறுகின்றன.

நெல்லை வட்டத்திலுள்ள குளங்கள்

* 288 **வினா—திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நெல்லை தாலுக்காவிலுள்ள (1) வேளார் குளம், (2) உற்பத்தியார் குளம் இவைகள் போதுமான தண்ணீர் நிரம்ப முடியாமல் தூர்ந்து மேடாகிவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவைகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்திச் சீர்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: இந்த இரண்டு குளங்களும் நீண்ட நாட்களாக தூர் எடுக்கப்படாமல், கரை உயர்த்தப்படாமல் இருப்பதால் அங்கிருக்கிற ஆயக்கட்டுகளில் நஞ்சை விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறதே, இந்தப் பஞ்ச நிவாரண திட்டத்தின் கீழோ அல்லது வேறு ஒரு திட்டத்தின் கீழோ இந்தக் குளங்களை ஆழப்படுத்த, கரைகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு ஏரியை ஆழப் படுத்துவது, கரையை உயர்த்துவது என்றால் அந்த ஏரியின் ஆயக்கட்டுகள் பாதிக்கப்பட்டிருந்தால் ஏரியை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் இதைக் கொண்டு வரலாம். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் சொல்லக்கூடிய வேளார் குளம் 14.3 ஏக்கராவுக்கு பாசன வசதி அளிக்கக் கூடியது. அதில் இதுவரை பாதிக்கப் பட்டிருப்பது .63 ஏக்கராதான். அடுத்து உற்பத்தியார் குளம் ஆயக்கட்டை எடுத்துக் கொண்டால் அது 34.95 ஏக்கராவுக்கு பாசனம் அளிப்பது. இதில் .07 ஏக்கராதான் பாசன வசதி பெறுமல் இருக்கிறது என்கிற புள்ளிவிவரம் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டுமே பாசன வசதியைப் பூரணமாக பெற்றிருக்கிற காரணத்தினுல் தற்போது அவை விடப்பட்டிருக்கின்றன.

குறுவை சாகுபடியில் கொள்முதல்

* 289 வினு—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு குறுவை சாகுபடியில் அரசாங்கம் கொள் முதல் செய்த நெல் எவ்வளவு ?

(இ) கொள்முதலுக்கென தமிழ்நாடு அரசாங்கம் நிர்ணயித் துள்ள விலை என்ன ?

(உ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1974-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தின்போது, 31—12—1974 வரை, 1,50,132 டன் அரிசியை அரசு கொள்முதல் செய்துள்ளது.